# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2134 - 2019 ජූලි මස 26 වැනි සිකුරාදා - 2019.07.26

*2134 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1288 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 1291 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | 1300 |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 1302 |


**கவனிக்க.-** (i) நம்பிக்கைப்பொறுப்பு பற்றுச்சீட்டுகள் (திருத்தம்) சட்டமூலம், 2019, யூலை 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) மதுவரி (திருத்தம்) சட்டமூலம், 2019, யூலை 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளில் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2019, ஒகத்து மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, ஒகத்து மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் - வெற்றிடம்

## பன்னல பிரதேச சபை

வட மேல் மாகாண அரச சேவையின் கீழ் பன்னல பிரதேச சபையில் பின்வரும் பதவிகள் மற்றும் ஆரம்ப தர வெற்றிடங்களை நிரப்புவதற்கு இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளையுடைய பன்னல பிரதேச சபையின் நிர்வாகப் பிரதேசத்தின் நிரந்தர குடியிருப்பாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பன்னல பிரதேச சபையில் ஏற்கனவே சேவையாற்றுவதற்கான தகுதிகாண், பதில், தற்காலிக மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

| பதவி | வெற்றிட எண்ணிக்கை | சம்பள அளவுகோள் | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| திறமை சாராத தரம்- III சுகாதார ஊழியர் | 04 | பொ.நி.சு. 3/2016 இன் கீழ் PL- 1 சம்பள குறியீடு முதல் படிநிலை ஆரம்ப சம்பளமாகக் கொள்ளப்படும் ரூபா 24,250-10X250-10X270-10X300-12X330-ரூபா 36,410 | அரச அங்கீகாரம் பெற்ற பாடசாலை ஒன்றில் தரம் 8 சித்தியடைந்திருத்தல் வேண்டும். |

**02. தேவைப்படும் ஏனைய தகுதிகள்**

I. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
II. விண்ணப்பத் திகதியன்று வயது 18 இற்கு குறைவாகவோ அல்லது 45 இற்கு அதிகமாகவோ இருத்தல் கூடாது.
III. பன்னல பிரதேச சபை நிர்வாக எல்லைக்குள் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். (பிரதேச செயலாளரினால் அல்லது தேர்தல் பதிவேட்டின் ஊடாக வதிவிடம் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்).
IV. விண்ணப்பதாரர் ஆரோக்கியமாக இருப்பதோடு நன்னடத்தை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
V. குற்றவியல் சட்டத்தின் கீழ் எந்த நீதிமன்றத்திலும் குற்றம் சாட்டப்படாதவர்.

**03. ஆட்சேர்ப்பு நடைமுறை**

பதவியின் தன்மைக்கேற்ப எழுத்துப் பரீட்சை, செயன்முறைப் பரீட்சை /வாய்மொழிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை ஊடாக தகுதியான விண்ணப்பதாரர்களில் இருந்து ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**04. சேவை மற்றும் தொழில் நிபந்தனைகள்**

I. இந்தப் பதவி நிரந்தரமானது மற்றும் ஓய்வூதியம் பெறத்தக்கது.
II. நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்துக்குட்பட்டது.
III. ஆட்சேர்ப்பு நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பன்னல பிரதேச சபையால் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும், உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான சட்டங்களின் விதிகளுக்கும், வட மேல் மாகாண பொதுச் சேவை நிபந்தனைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும், நிதி ஒழுங்குமுறைகள் மற்றும் ஸ்தாபன கோவையின் நிபந்தனைகளுக்கும் ஏற்ப வேலை செய்ய உடன்படல் வேண்டும்.

**05. விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்**

I. மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப விண்ணப்பதாரியால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை 19.08.2019 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக "செயலாளர், பன்னல பிரதேச சபை", பன்னல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
II. கடித உறையின் மேல் இடது பக்கத்தில் ................................ பதவிக்கான என்று எழுதி அனுப்பப்படல் வேண்டும்.
III. பின் வரும் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைக்கவும்.
a. பிறப்பு அத்தாட்சிப்பத்திரம்.
b. கல்விச் சான்றிதழ்கள்

c. பாடசாலை விடுகைச் சான்றிதழ்.
d. வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம உத்தியோகத்தர் சான்றிதழ் (பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்).
e. சமீபத்தில் பெறப்பட்ட நன்னடத்தைச் சான்றிதழ்கள் 2.
f. அனுபவச் சான்றிதழ்.

இந்த விண்ணப்பம் கோரப்படும் போது அல்லது அதன் பிறகு ஆட்சேர்ப்பை பிற்போடுதல் அல்லது இந்த அறிவித்தலை மாற்றுதல். இரத்துச் செய்தல் அல்லது திருத்தம் செய்யும் முழு அதிகாரமும் பன்னல பிரதேச சபை செயலாளருக்குரியது.

K.R.P.G.R. கருணாநாயக,
செயலாளர்,
பிரதேச சபை.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பன்னல பிரதேச சபை**

**பன்னல பிரதேச சபையில் ....................................................பதவி**

01. முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................................

02. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் : ...................................................................

03. நிரந்தர முகவரி : ..................................................................................................

04. கிராம அலுவலர் பிரிவு மற்றும் இலக்கம் : .................................................................................

05. பிரதேச செயலகம் : ..................................................................................................

06. மாவட்டம் : ..........................................................................................................

07. பிறந்த திகதி : ஆண்டு : மாதம் : திகதி :

08. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

09. பால் : ஆண்/பெண் : ..............................................................................................

10. விவாக நிலை : ..................................................................................................

11. நீர் இலங்கைப் பிரசையாயின், பிறப்பின் மூலமா? அல்லது பதிவின் மூலமா? : ............................................

12. தேசிய ஆள் அடையாள அட்டை இல. : ..............................................................

*13.* *கல்வித் தகைமைகள் :*

.................................................................................................................................................
.................................................................................................................................................
.................................................................................................................................................
.................................................................................................................................................

*தொழில் மற்றும் வேறு தகைமைகள் :*

.................................................................................................................................................
.................................................................................................................................................
.................................................................................................................................................
.................................................................................................................................................

*12.* *சேவை அனுபவம் :*

.................................................................................................................................................
.................................................................................................................................................

*இந்த பிரதேச சபையில் தற்போது பதில்/சாதாரண வேலை செய்பவராயின், சேவைக் காலம் மற்றும் தகவல்கள், வேலைக் கமர்த்தல் நிலை (நிரந்தரம்/சாதாரண/தற்காலிக/பதில்/கூலி அடிப்படையில்)*

.................................................................................................................................................
.................................................................................................................................................

*எனது அறிவுக்கெட்டிய வகையில் நான் வழங்கிய தகவல்கள் சரியானவையும் உண்மையானதும் என்று உறுதிப் படுத்துகின்றேன். தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் நான் வழங்கிய தகவல்கள் பிழையானவை என்று கருதப்படுமிடத்து நான் தகுதியற்றவனாகக் கருதப்படுவதோடு வேலைக்கமர்த்திய பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து எந்த நஷ்ட ஈடும் இன்றி வேலையிலிருந்து நீக்கப்படவும் முடியும் என்பதை நான் நன்கறிவேன்*

................................,
*விண்ணப்பதாரியின் கையொப்பம்*

*திகதி* ................................

*15.* *நிறுவனத் தலைவரின் சான்றுரை :*

*இவ்விண்ணப்பதாரி திரு./ திருமதி/ செல்வி ................................................................ என்பவர் தற்பொழுது இந்நிறுவனத்தில் ..................................... ஆக கடமையாற்றுகிறார் என்பதை உறுதிப் படுத்துவதோடு அவரின் சேவையை பரிந்துரை செய்கிறேன். அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர் விண்ணப்ப முடிவுத் திகதி வரையான 5 வருட காலத்துக்குள் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக் குள்ளாகவில்லை என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.*

................................,
*நிறுவனத் தலைவரின் கையொப்பம்*

*திகதி* ................................

*07 - 995*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## வரகாபொல பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் கீழ் 24(3) ஆம் உப பிரிவின் பிரகாரம் கிராமிய வீதிகள் பதிவினை பிரகடனப்படுத்தல்*

*கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதிகளை பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2) ஆம் உப பிரிவின் பிரகாரம் 2019.02.01 ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலினூடாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், குறித்த வீதிகள் தொடர்பாக ஏதேனும் எதிர்ப்பு அல்லது வழக்குத் தொடருதல் இதுவரையில் இடம்பெறாததினால் பிரதேச சபைகள் சட்டத்தின் 24(3) உப பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் வரகாபொல பிரதேச சபைக்கு உரித்தான வீதிகளென இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.*

என். சரத் சுமனசூரிய,
தவிசாளர்,
வரகாபொல பிரதேச சபை.

**அட்டவணை**

(1) கிராம அலுவலர் பிரிவு : 82, மங்கெதர கிராம அலுவலர் பிரிவு
கிராமம் : மங்கெதர
வீதியின் பெயர் : மாராவ வீதி
வீதியின் நீளம் : 79 மீற்றர்
வீதியின் அகலம் : 1 – 9 மீற்றர்
ஆரம்பிக்கும் இடம் : பட்டகொல்ல வத்த மதகு அருகால்

(i) வீதியின் எல்லைகள்
இடது புறம் : வாய்க்கால்

வலது புறம் : ஏ. எஸ். விமலசிறி என்பவருக்கு உரித்தான மாராவ கும்புர
ஏ. எஸ். சோமசிறி என்பவருக்கு உரித்தான மாராவ கும்புர

(2) கிராம அலுவலர் பிரிவு : 78, ராகல்கந்த கிராம அலுவலர் பிரிவு
கிராமம் : ராகல்கந்த
வீதியின் பெயர் : மீகஹலந்த வீதி
வீதியின் நீளம் : 60 மீற்றர்
வீதியின் அகலம் : 03 மீற்றர்
ஆரம்பிக்கும் இடம் : பட்டே குடியேற்றத்திலிருந்து பஸ்பொலகந்த பாடசாலை சந்திக்குச் செல்கின்ற வீதியில் ஹெல்தெனிய வீதி

(i) வீதியின் எல்லைகள்
இடது புறம் : ஜே. டீ. சோமாவதீ என்பவருக்கு உரித்தான மீகஹலந்த வத்த காணி

வலது புறம் : எம். எம். டி. ஆர். ஆர். மஹிபால என்பவருக்கு உரித்தான கெந்தகொல்ல வத்த
எம். எம். டி. எஸ். மஹிபால என்பவருக்கு உரித்தான கெந்தகொல்ல வத்த

(3) கிராம அலுவலர் பிரிவு : 94பி, நிவட்டுவ கிராம அலுவலர் பிரிவு
கிராமம் : பஹல வெலிகல்ல கொஸ்னாவல
வீதியின் பெயர் : பஹல வெலிகல்ல கொஸ்னாவல வீதி
வீதியின் நீளம் : 2.1 கிலோ மீற்றர்
வீதியின் அகலம் : 18 அடி
ஆரம்பிக்கும் இடம் : கணித்தபுர பந்தெனிய வீதியில் 1 ஆம் கி. மீற்றர் கம்பத்திற்கு அருகில் உள்ள சந்தி

(i) வீதியின் எல்லைகள்

| | |
|---|---|
| இடது புறம் : | டி. நிமல் சுரவீர என்பவருக்கு உரித்தான அக்கர 20 இறப்பர் காணி |
| | பி. ஜீ. பியதாஸ என்பவருக்கு உரித்தான எட்னாவத்த |
| | டி. நிமல் சுரவீர என்பவருக்கு உரித்தான வீட்டுத் தோட்டம் |
| | கே. அனுருத்த புஷ்ப குமார என்பவருக்கு உரித்தான பொல்கஹமுல கும்புர |
| | பீ. எச். கிரிநேரிஸ் என்பவருக்கு உரித்தான மீகஹமுல கும்புர |
| | பீ. எச். அனுர சித்திரானந்த என்பவருக்கு உரித்தான தம்புகொல்ல அஸ்ஸெத்தும |
| | பி. சுனில் ஜயரத்தின என்பவருக்கு உரித்தான பன்கொல்லஹேன அஸ்ஸெத்தும |
| | பி. எச். விஜித்த என்பவருக்கு உரித்தான நிந்த கும்புர |
| | கமத்தை |
| | ஜீ. ஆர். மாலனீ என்பவருக்கு உரித்தான சியம்பலாகஹமுல கனட்டி |
| | பி. எச். சிறிபால மற்றும் சிலருக்கு உரித்தான இஹல பங்குவ (அம்பகஹ கும்புர) |
| வலது புறம் : | டபிள்யூ. பிரேமசந்திர வர்ணபுர என்பவருக்கு உரித்தான எட்னாவத்த |
| | கே. எஸ். விமலரத்தின என்பவருக்கு உரித்தான எட்னாவத்த |
| | பீ. எச். விலியம் என்பவருக்கு உரித்தான வயல் |
| | வாய்க்கால் |
| | வாய்க்கால் |
| | வாய்க்கால் |
| | வாய்க்கால் |
| | வாய்க்கால் |
| | வாய்க்கால் |
| | வாய்க்கால் |
| | பீ. ஜீ. ஜேமிஸ் மற்றும் சிலருக்கு உரித்தான பத்தஹகாவ கும்புர |

*07 - 805*

---

## ஹிக்கடுவ நகர சபை

### திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான துணைவிதியை ஏற்றுக்கொள்ளல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைச் (நியதி கட்டளைச்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) அத்தியாயத்தின் கீழ் வாசிக்கப்பட்டதும் 261 ஆம் அதிகாரத்தின்படி 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தென் மாகாண சபை உள்ளூராட்சி நிர்மாணத்துறை பொறுப்பமைச்சரின் அதிகாரத்தின் கீழ் அவரால் அமைக்கப்பட்டதும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1834 ஆம் இலக்கம் கொண்டதும் 2013.10.25 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதும், நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரத்தின்) கீழ் 153 ஆம் பிரிவின் படி வாசிக்கப்பட்டதும் குறித்த கட்டளைச் சட்டத்தின் 118 ஆம் பிரிவு மற்றும் 157 ஆம் பிரிவின் 09 ஆம் உப பிரிவின் (ஆ) மற்றும் (இ) அத்தியாயத்தில் மற்றும் திண்ம கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம் தொடர்பான துணைவிதியை விதிப்பதற்காக நகர சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு, 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி) சட்டத்தின் 3 ஆம் உப பிரிவின் ஒழுங்குவிதிகளுக்கு கீழ்ப்படிந்து ஏற்றுக் கொள்வதற்கும் இவ்வறிவித்தலானது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து குறித்த நியதிகளை ஹிக்கடுவ நகர சபை வலுப் பிரதேசத்திற்குள் செயற்படுத்தப்படுவதற்கும் 2019.05.02. ஆம் திகதிய தீர்மான இலக்கம் (ஏ) 1 இன் கீழ் தீர்மானித்துள்ளதாகவும் இதன் மூலம் அறிவித்தல் விடுக்கின்றேன்.*

வினீ காரியவசம்,
தலைவர்,
ஹிக்கடுவ நகர சபை.

*07 - 832*

## கடுவெல மாநகர சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி “சுஹத மாவத்தை” எனப் பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

ஏ. டீ. எஸ். சதீகா,
நகர ஆணையாளர் (பதிற் கடமை),
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.
2019, யூலை 05.

### அட்டவணை

1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் : கடுவெல மாநகர சபை
2. மாவட்டம் : கொழும்பு
3. கிராம அலுவலர் பிரிவு : 479 E - பட்டபொத்த
4. வீதியின் தற்போதைய பெயர் : இல்லை
5. புதிதாக இடப்பட்டுள்ள பெயர் : சுஹத மாவத்தை
6. வீதியின் விவரம்

(i) வீதியின் தொடக்கம்

இடது புறம் : பத்தரமுல்ல, ரொபட் குணவர்தன மாவத்தையில் 43 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

வலது புறம் : பத்தரமுல்ல, ரொபட் குணவர்தன மாவத்தையில் 32 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

(ii) வீதியின் முடிவு

இடது புறம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 37/4 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

வலது புறம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 37/3 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

வீதி முடிவு : பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 37/5 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

07 - 833/1

---

## கடுவெல மாநகர சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி “சாம பிளேஸ்” எனப் பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

ஏ. டீ. எஸ். சதீகா,
நகர ஆணையாளர் (பதிற் கடமை),
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.
2019, யூலை 05.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | : | கடுவெல மாநகர சபை |
| 2. | மாவட்டம் | : | கொழும்பு |
| 3. | கிராம அலுவலர் பிரிவு | : | 476 மாலபே (கி) |
| 4. | வீதியின் தற்போதைய பெயர் | : | இல்லை |
| 5. | புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | சாம பிளேஸ் |
| 6. | வீதியின் விவரம் | | |

(i) வீதியின் தொடக்கம்

இடது புறம் : மாலபே ஐ. ஜோதிபால மாவத்தையில் அமைந்துள்ள வெற்றுக்காணி

வலது புறம் : மாலபே ஐ. ஜோதிபால மாவத்தையில் அமைந்துள்ள 70/சீ எனும் இலக்கமுடைய வெற்றுக்காணி

(ii) வீதியின் முடிவு

இடது புறம் : பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதியின் 70/ஐ/2 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

வலது புறம் : பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதியின் 70/எப் எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

வீதி முடிவு : பெயரிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வீதியின் 70/ஜ எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

07 - 833/2

---

## கடுவெல மாநகர சபை

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 252 ஆம் அத்தியாயமான மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி "நெழும் மாவத்தை" எனப் பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

ஏ. டீ. எஸ். சதீகா,
நகர ஆணையாளர் (பதிற் கடமை),
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.
2019, யூலை 05.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | : | கடுவெல மாநகர சபை |
| 2. | மாவட்டம் | : | கொழும்பு |
| 3. | கிராம அலுவலர் பிரிவு | : | 494 ஹோகந்தர (வ) |
| 4. | வீதியின் தற்போதைய பெயர் | : | இல்லை |
| 5. | புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | நெழும் மாவத்தை |
| 6. | வீதியின் விவரம் | | |

(i) வீதியின் தொடக்கம்

இடது புறம் : ஹோகந்தர வடக்கு, ரத்னாராம வீதியில் 372/1/எப் எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

வலது புறம் : ஹோகந்தர வடக்கு, ரத்னாராம வீதியில் 375/5 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

(ii) வீதியின் முடிவு

இடது புறம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 272/3 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

வலது புறம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 272/4 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

*07 - 833/3*

---

## கடுவெல மாநகர சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி "ஸ்ரீ சாக்கியசிங்காராம வீதி" எனப் பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

ஏ. டீ. எஸ். சதீகா,
நகர ஆணையாளர் (பதிற் கடமை),
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.
2019, யூலை 05.

### அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | : | கடுவெல மாநகர சபை |
| 2. | மாவட்டம் | : | கொழும்பு |
| 3. | கிராம அலுவலர் பிரிவு | : | 477 B முத்தெட்டுகொட |
| 4. | வீதியின் தற்போதைய பெயர் | : | இல்லை |
| 5. | புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | ஸ்ரீ சாக்கியசிங்காராம வீதி |
| 6. | வீதியின் விவரம் | | |

(i) வீதியின் தொடக்கம்

இடது புறம் : அத்துறுகிரிய, எட்டாம் மைல் கல்லில் அமைந்துள்ள DSI களஞ்சியசாலை

வலது புறம் : அத்துறுகிரிய, எட்டாம் மைல் கல்லில் அமைந்துள்ள 604/1 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

(ii) வீதியின் முடிவு

இடது புறம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 597 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

வலது புறம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 594/7 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

*07 - 833/4*

## கடுவெல மாநகர சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி "ஜினதாச மாவத்தை" எனப் பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

ஏ. டீ. எஸ். சதீகா,
நகர ஆணையாளர் (பதிற் கடமை),
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.
2019, யூலை 05.

### அட்டவணை

1. உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் : கடுவெல மாநகர சபை
2. மாவட்டம் : கொழும்பு
3. கிராம அலுவலர் பிரிவு : 476 B மாலபே (வ)
4. வீதியின் தற்போதைய பெயர் : இல்லை
5. புதிதாக இடப்பட்டுள்ள பெயர் : ஜினதாச மாவத்தை
6. வீதியின் விவரம் :

(i) வீதியின் தொடக்கம்
இடது புறம் : மாலபே சுதர்ஷன மாவத்தையில் 221/1 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

வலது புறம் : மாலபே சுதர்ஷன மாவத்தையில் 223 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

(ii) வீதியின் முடிவு
இடது புறம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள ஒரு வெற்றுக்காணி

வலது புறம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 223/6 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

வீதி முடிவு : பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 237/10 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

07 - 833/5

---

## கடுவெல மாநகர சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி "சதஹம் மாவத்தை" எனப் பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

ஏ. டீ. எஸ். சதீகா,
நகர ஆணையாளர் (பதிற் கடமை),
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.
2019, யூலை 05.

### அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | : | கடுவெல மாநகர சபை |
| 2. | மாவட்டம் | : | கொழும்பு |
| 3. | கிராம அலுவலர் பிரிவு | : | 479 E - பட்டபொத்த |
| 4. | வீதியின் தற்போதைய பெயர் | : | இல்லை |
| 5. | புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | சதஹம் மாவத்தை |
| 6. | வீதியின் விவரம் | : | |

(i) வீதியின் தொடக்கம்

இடது புறம் : பத்தரமுல்ல, ரொபட் குணவர்தன மாவத்தை, உதயபுர வீதியில் 112/பீ எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

வலது புறம் : பத்தரமுல்ல, ரொபட் குணவர்தன மாவத்தை, உதயபுர வீதியில் 113/சீ எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

(ii) வீதியின் முடிவு

இடது புறம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 114/ஏ/2/ஏ எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

வலது புறம் : பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள ஒரு வெற்றுக்காணி

பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 114/ஏ/2 பீ எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம்

07 - 833/6

---

### கடுவெல மாநகர சபை

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடை நேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் அத்தியாயத்துடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய (252 ஆம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 71(1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள வீதி "முதலாம் ஒழுங்கை" எனப் பெயரிடப்பட்டுள்ளதென இத்தால் அறியத்தரப்படுகின்றது.

ஏ. டீ. எஸ். சதீகா,
நகர ஆணையாளர் (பதிற் கடமை),
கடுவெல மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கடுவெல.
2019, யூலை 05.

### அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | : | கடுவெல மாநகர சபை |
| 2. | மாவட்டம் | : | கொழும்பு |
| 3. | கிராம அலுவலர் பிரிவு | : | 490 A - அத்துறுகிரிய (தெ) |
| 4. | வீதியின் தற்போதைய பெயர் | : | இல்லை |
| 5. | புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | முதலாம் ஒழுங்கை |
| 6. | வீதியின் விவரம் | : | |

(i) வீதியின் தொடக்கம்

| | |
|---|---|
| இடது புறம் : | அத்துறுகிரிய பழைய சந்தி, சந்ர குணசேகர மாவத்தையில் 384/5 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |
| வலது புறம் : | அத்துறுகிரிய பழைய சந்தி, சந்ர குணசேகர மாவத்தையில் 385 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |

(ii) வீதியின் முடிவு

| | |
|---|---|
| இடது புறம் : | பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள ஒரு வெற்றுக்காணி |
| வலது புறம் : | பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 382/2 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |
| வீதி முடிவு : | பெயரிடுவதற்கு உத்தேச வீதியில் அமைந்துள்ள 383/4 எனும் வீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் |

*07 - 833/7*

---

**வவுனியா நகர சபை**

*1952 ஆம்ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகளின்
(நியமத் துணை விதிகள்) சட்டம்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகள் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவில் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி 2019 ஆம் ஆண்டு மே மாதம் 16 ஆந் திகதி வவுனியா நகர சபையால் கீழ் கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

இராசலிங்கம் கௌதமன்,
தலைவர்,
வவுனியா நகரசபை.

நகரசபை அலுவலகம்,
வவுனியா,
*2019, யூலை 12.*

VUC/2019/05/14/11 **ஆம் இலக்க 2019.05.16 ஆந் திகதிய தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தின் 2 ஆவது விதியின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அதிகார சபைகளில் (நியமத் துணை விதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வடக்கு மாகாண சபையின் உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின்படி வடக்கு மாகாண உள்ளூராட்சி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 2018, மே மாதம் 09 ஆந் திகதிய 2070/11 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டு வடக்கு மாகாண சபையால் 2018.09.11 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டு 2018, ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதிய 2092/6 இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் 4 (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டதுமான அத்தியாயம் 7 - 9 வரையான வடக்கு மாகாண நகர சபைகளுக்கான துணைவிதிகள் வர்த்தமானியில்*

*பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்வது என்றும் வவுனியா நகர சபை பிரதேசத்தில் நடைமுறைப்படுத்துவது என்றும் மேலே கூறப்பட்ட 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க (அத்தியாயம் 261) நியமத் துணைவிதிகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வவுனியா நகர சபை தீர்மானிக்கின்றது.*

*7 - 1003*

---

**பூஜாபிட்டிய பிரதேச சபை**

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள் சட்டம்*

*261 ஆவது அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 09 (03) உப பிரிவுக்கு அமையவும் பின்வரும் தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அனுர பர்ணாந்து*
*தவிசாளர்,*
*பூஜாபிட்டிய பிரதேச சபை.*

*பிரதேசசபை அலுவலகம்,*
*பூஜாபிட்டிய,*
*2019, யூலை 08.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 261 ஆவது அத்தியாயம் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் (2) ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டு 2017.05.05 ஆந் திகதியையும் 2017/42 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள்*

*01. பொது நூலகங்கள் பற்றிய துணை விதிகள்*
*02. திரிந்து விற்பனை செய்வது பற்றிய துணை விதிகள்*
*03. விளம்பர அறிவித்தல்கள் பற்றிய துணை விதிகள்*
*04. விலங்குப் பண்ணைகளை நிருவகித்தல் மற்றும் முறைப்படுத்துதல் பற்றிய துணை விதிகள்*
*05. இறைச்சி விற்பனை தொடர்பான துணை விதிகள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து செயற்படுத்தவும், அதற்கு முதல் நாள் நள்ளிரவு 12 மணி வரை பூஜாபிட்டிய பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் செயற்பட்டு வந்த மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து துணை விதிகளைச் செயலிழக்கச் செய்யவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 09 (03) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2019 யூன் மாதம் 11 ஆந் திகதி கொண்ட சபையின் இ : 1 : 7 இலக்கத் தீர்மானத்தின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றேன்.*

*7 - 1000/1*

### பூஜாபிட்டிய பிரதேசசபை

*ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள்*
*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணைவிதிகள் சட்டம்*

*261 ஆவது அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் 3 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமையவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 09 (03) ஆம் உப பிரிவுக்கு அமையவும் பின்வரும் தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*அனுர பர்ணாந்து*
*தவிசாளர்,*
*பூஜாபிட்டிய பிரதேச சபை.*

*பிரதேசசபை அலுவலகம்,*
*பூஜாபிட்டிய,*
*2019, யூலை 08.*

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, 261 ஆவது அத்தியாயம் 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி அமையங்கள் (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிகள்) சட்டத்தின் (2) ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவின் கீழ் மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சருக்குச் சாட்டப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மத்திய மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டதும், மத்திய மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்டதும், 2013.06.28 ஆந் திகதியையும் 1816/42 ஆம் இலக்கத்தையும் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் IV (அ) பிரிவு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள்*

*01. திண்மக் கழிவுப்பொருட்கள் முகாமை பற்றிய துணை விதிகள்*

*இந்தத் தீர்மானம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து செயற்படுத்தவும், அதற்கு முதல் நாள் நள்ளிரவு 12 மணி வரை பூஜாபிட்டிய பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் இது தொடர்பில் செயற்பட்டு வந்த மேலே குறிப்பிடப்பட்டுள்ள துணை விதிகள் அனைத்தையும் செயலிழக்கச் செய்யவும், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 09 (03) ஆம் உப பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய 2019 யூன் மாதம் 11 ஆந் திகதி கொண்ட சபையின் இ : 1 : 7 ஆம் இலக்கத் தீர்மானத்தின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றேன்.*

*7 - 1000/2*

---

## வரவு செலவுத் திரட்டுக்கள்

**கொபைகனே பிரதேச சபை**

*வருமானம் மற்றும் செலவு பற்றிய அறிக்கை*

*பிரதேச சபை சட்டம் 216 படி ஆண்டு நிதி அறிக்கையினை (இருப்பு நிலை) பொது மக்கள் தெரிந்துக் கொள்வதற்கு பிரசுரிப்பதற்கு நான் தீர்மானித்தது பற்றி இத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*டப்.எம். சுரேஸ் வர்ணசூரிய,*
*தலைவர்,*
*கொபைகனே பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*கொபைகனே,*
*2019, யூலை 05.*

கொபைகனே பிரதேச சபையின் 2018.12.31 ஆந் திகதிக்கு இருப்பு நிலை

| | 2018.12.31 செலவுகள் ரூபா | 2017.12.31 செலவுகள் ரூபா |
|---|---|---|
| குறிப்பு 01 | | |
| 110. **நிலையான சொத்து** | | |
| 111. காணி மற்றும் கட்டிடங்கள் | 107,823,832.40 | 104,693,267.41 |
| 112. மோட்டார் வாகனம் மற்றும் சில்லு வண்டி | 22,721,864.00 | 22,721,864.00 |
| 113. இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 29,550,774.00 | 27,250,983.00 |
| 114. மரத் தளபாடம் மற்றும் பொறுத்துகை | 5,310,862.47 | 6,121,807.47 |
| 115. நூலக புத்தகங்கள் | 3,048,806.75 | 28,48,925.75 |
| **கூட்டுத் தொகை** | **168,456,139.62** | **163,636,847.63** |
| குறிப்பு 02 | | |
| 120. **கையிருப்பு தொகை** | | |
| 121. பொது களஞ்சியம் | 808,347.00 | 236,608.43 |
| 122. கழிவுகள் | | |
| 123. மின்சார கிடங்கு | 161,478.00 | 64,815.00 |
| 124. ஓவர்சியர் கள களஞ்சியம் | 334,551.00 | 614,931.25 |
| **கூட்டுத் தொகை** | **1,304,376.00** | **916,354.68** |
| குறிப்பு 03 | | |
| 130. **பயன்பாட்டு சேவைக் கடன்** | | |
| 131. மக்களுக்காக பாதை அமைத்தல் | | |
| 132. வீட்டு உதவி வாடிகால்கள் | | |
| 133. கைவிடப்பட்ட கட்டிடங்களின் பராமரிப்பு | | |
| 134. தனியார் வீதிகளில் நீர்ப்பாசனம் | | |
| **கூட்டுத் தொகை** | **0.00** | **0.00** |
| குறிப்பு 04 | | |
| 150. **அறவிடப்பட கூடிய பயன்பாட்டு சேவை** | | |
| 151. அறவிடுவதற்கு உள்ள வேலைகள் | | |
| 152. பங்கிற்காக உபகரணங்களை அமைத்தல் | | |
| 153. பலவகை | | |
| **கூட்டுத் தொகை** | **0.00** | **0.00** |
| குறிப்பு 05 | | |
| 160. **வருமான கடனாளிகள்** | | |
| 161. மதிப்பீட்டின் பற்றாக்குறை | 311,722.02 | 217,295.44 |
| 162. ஏக்கர் வரியின் பற்றாக்குறை | 47,817.54 | 45,505.94 |
| 163. வாடகை பற்றாக்குறை | 30,681.67 | 8,650.00 |
| 164. சேவைக்கான கட்டண பற்றாக்குறை | | |
| 165. பற்றாணை மற்றும் அபராத நிலுவை | 2,200,000.00 | 4,983,802.00 |
| 166. ஏனைய வருமான பற்றாக்குறை | 10,000,000.00 | 8,429,800.00 |
| 166. வருமான உதவி பற்றாக்குறை | 1,905,121.57 | 12,474,255.14 |
| 167. மூலதன உதவி பற்றாக்குறை | 5,021,115.36 | 857,0031.61 |
| **கூட்டுத் தொகை** | **19,516,458.16** | **34,729,340.13** |
| குறிப்பு 06 | | |
| 170. **முன் செலுத்துகை** | | |
| 171. முற்பணம் | 325,000.00 | 265,911.99 |
| **கூட்டுத் தொகை** | **325,000.00** | **265,911.99** |
| குறிப்பு 07 | | |
| 180. **நிலையான வைப்பு** | | |
| 181. நிலையான வைப்புக்களில் உள்ள சபையின் நிதி | 10,896,866.04 | 13,315,774.11 |
| 182. நிலையான வைப்புக்களில் உள்ள பணியாளர் பிணை வைப்பு | 157,713.68 | 157,687.13 |
| **கூட்டுத் தொகை** | **11,054,579.72** | **13,473,461.24** |

| | | |
|---|---|---|
| குறிப்பு 08 | | |
| 190. **நிதி** | | |
| 191. 281-1001-90000122 | 2,115,907.14 | 4,515,294.29 |
| 192. 281-1001-10000423 | 437,559.54 | 376,716.20 |
| 193. 281-1001-40029514 | 10,989.33 | 10,989.33 |
| 194. 281-1002-80000122 | 80,066.14 | 80,066.14 |
| **கூட்டுத் தொகை** | **2,644,522.15** | **4,983,065.96** |
| குறிப்பு 09 | | |
| 230. **கடனாளிகள்** | | |
| 231. பலதரப்பட்ட கடனாளிகள் | 10,379,516.41 | 18,993,505.85 |
| **கூட்டுத் தொகை** | **10,379,516.41** | **18,993,505.85** |
| குறிப்பு 10 | | |
| 240. **முன் கிடைப்பனவு** | | |
| 241. முன்பு கிடைத்த வருமானம் | 104,936.01 | 87,571.84 |
| **கூட்டுத் தொகை** | **104,936.01** | **87,571.84** |
| குறிப்பு 11 | | |
| 250. **மீள் செலுத்த வேண்டிய வைப்பு** | | |
| 251. பலதரப்பட்ட வைப்பு | 66,503.36 | 49,503.36 |
| 252. விலை மனு வைப்பு | 1,342,471.90 | 795,106.65 |
| 253. பணியாளர் பிணை வைப்பு | 157,713.68 | 158,287.13 |
| 254. வர்த்தக கூடத்திற்கான வைப்பு | 32,500.00 | 32,500.00 |
| 255. நடைபாதை கடைகளுக்கான வைப்பு | 9,099.00 | 9,099.00 |
| 256. தொழிற்சாலை வைப்பு | 3,537,188.51 | 968,713.03 |
| **கூட்டுத் தொகை** | **5,145,476.45** | **2,013,209.17** |
| குறிப்பு 12 | | |
| 210. **திரட்டப்பட்ட நிதி மற்றும் இருப்பு** | | |
| திரட்டப்பட்ட நிதியம் | 24,406,966.20 | 36,767,995.39 |
| மூலதன பயன்பாட்டிற்கு வருமானத்தினால் பங்களித்தல் | 168,456,139.63 | 163,636,847.63 |
| **கூட்டுத் தொகை** | **192,863,105.83** | **20,404,843.02** |
| குறிப்பு 13 | | |
| 220. **மூலதன கடன்** | | |
| 221. உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியம் | 822,539.54 | 1,859,609.53 |
| **கூட்டுத் தொகை** | **822,539.54** | **1,859,609.53** |

**7-758**

# நானாவித அறிவித்தல்கள்

## காத்தான்குடி நகரசபை

சேவைகள் மற்றும் தண்டங்கள் பற்றிய அறிவித்தல்-2019

நகர சபைக் கட்டளைச்சட்டத்தின் 255 ஆம் அத்தியாயத்தின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கமைவாக காத்தான்குடி நகரசபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளுக்கான கட்டணங்கள் மற்றும் தண்டங்கள் பற்றிய அறவீடுகளுக்கான அனுமதி கடந்த 15.11.2018 ஆம் திகதிய 2018/191 ஆம் இலக்க சபைத் தீர்மானத்திற்கமைவாக அறவிடுவதாக இத்தால் பிரசுரிக்கின்றேன்.

எஸ். எச். எம். அஸ்பர்,
தவிசாளர்,
காத்தான்குடி நகரசபை.

நகர சபை அலுவலகம்,
காத்தான்குடி,
2019, யூலை 05.

**அட்டவணை**

| இல. | விபரம் | தொகை ரூபா |
|---|---|---|
| 01 | **விண்ணப்பப் படிவங்களுக்கான கட்டணம்** | |
| | பொது நூலக விண்ணப்பப்படிவக் கட்டணம் | 20 |
| | கட்டிட விண்ணப்ப படிவம் நகர அபிவிருத்தி அதிகார சபைக்குட்பட்ட பகுதி | 600 |
| | கட்டிட விண்ணப்பப்படிவம் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்திக்குட்பட்ட பகுதி | 500 |
| | பெயர் மாற்றப் படிவம் | 150 |
| | ஒப்பந்தகாரருக்கான படிவம் | 2,000 |
| | இறைச்சிக் கடைக்காரருக்கான கேள்விப் படிவம் | 2,000 |
| 02 | **வீதியைத் தடை செய்தலுக்கான அனுமதிக் கட்டணம்** | |
| | கட்டிட நிர்மாணப் பொருட்களை வீதிகளில் கொட்டி அள்ளுவதற்கான கட்டணம் டிப்பர் ஒன்றுக்கு | 2,000 |
| | திருமண நிகழ்வுகளுக்கான கட்டணம் | 1,000 |
| | சமய நிகழ்வுகளுக்கான கட்டணம் | 1,000 |
| | தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களுக்கான கட்டணம் | 2,000 |
| | கருத்தரங்குகளுக்கான கட்டணம் | 500 |
| 03 | **வாகன தரிப்பிடக் கட்டணம்** | |
| | முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல் கட்டணம் நாளொன்றுக்கு | 10 |
| | முச்சக்கர வண்டிகளை நிறுத்தி வைத்தல் கட்டணம் வருடமொன்றுக்கு | 600 |
| 04 | **தண்டப்பண அறவீடுகள்** | |
| | கட்டாக்காளி மாடுகளை பிடித்து வைத்தல் கட்டணம் நாளொன்றுக்கு | 5,000 |
| | கட்டாக்காளி மாடுகளை பராமரித்தல் நாளொன்றுக்கு | 250 |
| | புத்தக தாமத தண்டப்பணம் | 5 |
| | துப்பரவு செய்யப்படாத காணிகளுக்கான தண்டம் | 5,000 |
| | சுற்றாடலுக்கும் சூழலுக்கும் உகந்ததற்றதாக காணப்படும் குடியிருப்பு அற்ற வீடுகளுக்கு தண்டம் | 10,000 |
| 05 | **சான்றிதழ் கட்டணங்கள்** | |
| | வீதி ரேகை சான்றிதழ் கட்டணம் | 3,000 |
| | வீதி குடி புகுவதற்கான சான்றிதழ் கட்டணம் | 3,000 |
| 06 | **கட்டடங்கள் வாடகை** | |
| | கலாச்சார மண்டபம் நாள் ஒன்றிற்கு | 10,000 |
| | மார்க்கப் பிரச்சார விடயங்களுக்கு | 4,000 |
| | கருத்தரங்கு, பொது விடயங்கள், ஏனையவை | 5,000 |
| | நூலக மண்டபம் நாள் ஒன்றிற்கு | 2,000 |
| | கடை சாடகை மாதமொன்றிற்கு | 5,000 |
| 07 | **வாகனங்கள் வாடகை** | |
| | வைப்றேட்டர் றோளர் (சிறியது) ஒரு நாளைக்கு | 7,000 |
| | றோளர் 10000 தொன் (பெரியது) | 7,000 |
| | கழிவு நீர் அகற்றும் கழிசக்கர் | 5,000 |
| | JCB மணித்தியாலம் ஒன்றிற்கு | 4,000 |

| | | |
|---|---|---|
| 08 | **இயந்திர வாடகை** | |
| | ஹேன்ட் வைப் றேட்டர் றோளர் ஒரு நாளைக்கு | 1,000 |
| | **உபகரணங்கள் வாடகை** | |
| | வடிகான் துப்பரவு செய்யும் உபகரணம் வாடகை ஒரு செட்டுக்கு | 500 |
| 09 | **பரிசோதனைக்கட்டணங்கள்** | |
| | குடிநீர் பெறுவதற்கான பரிசோதனைக் கட்டணம் | 500 |
| | ஆதனவரி பெயர் மாற்ற பரிசோதனைக் கட்டணம் | 350 |
| 10 | **விளம்பரப் பலகைகள் மற்றும் பதாதைகளுக்கான கட்டணம்** | |
| | வியாபார நிலையத்தில் பொருத்தப்படும் விளம்பரப் பலகை சதுர அடிக்கு | 100 |
| | பெனர் ஒரு சதுர அடிக்கு | 50 |
| | ஒளியூட்டப்பட்ட விளம்பரத்திற்கு | 300 |
| 11 | **வீதியை சேதப்படுத்தவற்கான அனுமதிக் கட்டணம்** | |
| | கிறவல் வீதி | 1,000 |
| | பொருத்துக்கல் வீதி | 2,500 |
| | கொங்கிறீட் வீதி | 3,500 |
| 12 | **களியாட்ட நிகழ்வுகளுக்கான கட்டணம்** | |
| | பெருநாற் திடலுக்கான கட்டணம் | 1,000 |
| | பெருநாற் பசார் கடற்கரை திடல் | 500 |
| 13 | **விலங்கறுமனைக் கழிவுகளை அகற்றுவதற்கான சேவைக் கட்டணம்** | |
| | நாள் ஒன்றிற்கு | 350 |
| 14 | **சேவைக்கட்டணங்கள்** | |
| | பொது நூலக அங்கத்துவக் கட்டணம் | 150 |
| | பொது நூலக அங்கத்துவ புதுப்பித்தல் கட்டணம் | 100 |
| | போட்டோ பிரதி ஒன்றிற்கு | 5 |
| | தொலைந்த பற்றுச்சீட்டை மீளப் பெறுவதற்கான கட்டணம் | 100 |

7 - 759

---

## மாந்தை மேற்கு பிரதேசசபை

### தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான கட்டணம் அறிவிடல் - 2019

இவ்வறிவித்தல் வர்த்தமானப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்படும் நாளிலிருந்து மாந்தை மேற்கு பிரதேசசபையின் அதிகார பிரதேசத்திற்குள் நிர்மாணிக்கப்பட்டுள்ள சேவை வழங்கும் தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கு 2019 ஆம் ஆண்டில் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு கட்டணங்களை அறவிடுவதென 2018.11.08 ஆந் திகதிய MN/MWPS/2018/11/ 08/160 ஆம் இலக்க தீர்மானம் மூலம் தீர்மானிக்கப்பட்டது என்றும் இத்தால் தெரிவிக்கப்படுகின்றது.

தொலைத்தொடர்புக் கோபுரம் ஒன்றிற்கான கட்டணம் (ஒரு வருடத்திற்கு) - ரூ. 10,000.00

ஆ. சந்தியோகு,
தவிசாளர்,
மாந்தை மேற்கு பிரதேச சபை.

பிரதேசசபை அலுவலகம்,
அடம்பன்,
2019, யூன் 17.

7 - 760

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.